கட்டுரை 06 · ARTICLE 06 | தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் அற இலக்கியமும்

# சங்க இலக்கிய மருதநிலமும் தகவல் தொழில்நுட்பமும்

*Sangam Literature’s Marutham Landscape and Information Technology*

**வே. சிவா**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சேலம் – 5

*V. Siva, Assistant Professor, Department of Tamil, Sona College of Arts and Science, Salem – 5*

**பக்கங்கள்:** 35–41

### ஆய்வுச் சுருக்கம்

சங்க இலக்கியம் ஐந்திணைகளாக நிலத்தை வகுத்து, ஒவ்வொரு நிலத்தின் இயற்கை, தொழில், மாந்தர், உணர்வு ஆகியவற்றை ஒரு முறையான கட்டமைப்புக்குள் வைத்துப் பாடுகிறது. அவற்றுள் மருதம் ஆற்றுப்பாசன வேளாண்மை நிலத்தையும் அதனோடு இணைந்த ஊர் வாழ்க்கையையும் சித்திரிக்கிறது. சங்கப் புலவர்கள் தகவல் தொழில்நுட்பம் என்ற கருத்தை அறியாதவர்கள்; ஆயினும் மருதத் திணையின் அறிவு வகைப்பாடு, தூதுவர் வழியான செய்திப் பரிமாற்றம், நீர்ப்பகிர்வு அறிவு, வாய்மொழி–ஓலை–அச்சு–எண்மிய ஊடகப் பயணம் ஆகியவை இன்றைய தகவல் அமைப்புகளோடு ஒப்பிடத்தக்க கருத்துகளைக் கொண்டுள்ளன. இக்கட்டுரை அவ்வொப்புமைகளை வரலாற்று எல்லைக்குள் நின்று ஆராய்ந்து, இன்றைய மருத நில வேளாண்மையில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடுகளையும் சவால்களையும் விளக்குகிறது. சங்க இலக்கியம் தொழில்நுட்பத்தை முன்கணித்தது என்பதல்ல அது அறிவை ஒழுங்குபடுத்தும் ஆழ்ந்த மரபைக் கொண்டிருந்தது என்பதே முடிவு.

**திறவுச்சொற்கள்:** சங்க இலக்கியம்; மருதத் திணை; திணைக் கோட்பாடு; அறிவுப் பிரதிநிதித்துவம்; தகவல் தொடர்பு; வேளாண் தகவல் தொழில்நுட்பம்; எண்மியமாக்கம்

### Abstract

Sangam literature divides the land into five *thinai* (landscape categories) and sings of the nature, occupations, people, and emotions of each within a systematic framework. Among them, Marutham depicts the agricultural land irrigated by rivers and the settled village life connected with it. The Sangam poets were unaware of the concept of information technology. Even so, several aspects of the Marutham *thinai* are comparable to today's information systems: its classification of knowledge, the exchange of messages through envoys, knowledge of water sharing, and the journey of media from oral tradition to palm leaf, print, and digital form. This article examines these parallels within historical limits and explains the applications and challenges of information technology in present-day agriculture in Marutham regions. Its conclusion is not that Sangam literature anticipated technology, but that it held a deep tradition of organizing knowledge.

**Keywords:** Sangam literature; Marutham thinai; thinai theory; knowledge representation; communication; agricultural information technology; digitization

## முன்னுரை

மொழியும் இலக்கியமும் ஒரு சமூகம் தன் அறிவை எவ்வாறு திரட்டி, வகைப்படுத்தி, தலைமுறைகளுக்குக் கடத்தியது என்பதற்குச் சான்றுகள். தகவல் தொழில்நுட்பம் என்பது இன்றைய வடிவில் மின்னணுக் கருவிகளைச் சார்ந்தாலும், அதன் அடிப்படைக் கேள்விகளான தரவை எப்படி வகைப்படுத்துவது, எப்படிச் சேமிப்பது, எப்படி ஒருவரிடமிருந்து

இன்னொருவருக்கு அனுப்புவது என்பவை மனிதச் சமூகங்களில் மிகப் பழங்காலத்திலிருந்தே இருந்தவை.

சங்க இலக்கியத்தில் மருதம் தனிச் சிறப்புடைய திணை. காவிரி, வைகை, தாமிரபருணி போன்ற ஆறுகளின் வளமிக்க சமவெளியில் நெல்லும் கரும்பும் விளையும் நிலமாக அது குறிக்கப்படுகிறது. அந்நிலத்தின் மக்கள் வேளாண்மை, வணிகம், அரசு நிர்வாகம், கலைகள் ஆகியவற்றோடு இணைந்து சிக்கலான சமூக வலைப்பின்னலை உருவாக்கியிருந்தனர். இவ்வலைப்பின்னலில் தகவல் எவ்வாறு இயங்கியது என்பதையும், அதை இன்றைய தகவல் தொழில்நுட்பக் கருத்துகளோடு எவ்வளவு தூரம் பொருத்தலாம் என்பதையும் இக்கட்டுரை ஆராய்கிறது.

## மருதத் திணையின் கோட்பாட்டு அடிப்படை

### முப்பொருள்

தொல்காப்பியர், அகத்திணையியல் அகப்பாடல்களின் பொருளை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூன்றாக வகுக்கிறது. முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும். கருப்பொருள் என்பது தெய்வம், மக்கள், உணவு, விலங்கு, பறவை, மரம், பூ, தொழில், யாழ், பறை போன்ற அந்நிலத்துக்குரிய பொருள்கள். உரிப்பொருள் என்பது அந்நிலத்துக்குரிய மனித ஒழுக்கமான உணர்வு. மருதத் திணைக்கு நிலம் வயலும் வயல்சார்ந்த இடமும்; பெரும்பொழுது ஆறும்; சிறுபொழுது வைகறை தெய்வம் வேந்தன்; உரிப்பொருள் ஊடலும் ஊடல் நிமித்தமும் என்று இலக்கண மரபு வகுக்கிறது.

மக்களாக உழவர், உழத்தியர்; உணவாகச் செந்நெல்; பூவாகத் தாமரை, குவளை; மரமாக மருதமரம்; பறவையாக நாரை, நீர்க்கோழி; விலங்காக எருமை, நீர்நாய்; பறையாக நெல்லரி கிணை, மணமுழவு யாழாக மருதயாழ்; பண்ணாக மருதப்பண் முதலியன கருப்பொருள் வரிசையில் வழங்கப்படுகின்றன. இவ்வாறு ஒரு நிலத்தின் பண்புகள் முழுவதையும் அடுக்கடுக்காக வகைப்படுத்துவது அறிவுச் சேகரிப்பின் முறைசார் வடிவமாகும்.

### முறைசார் வகைப்பாடாகத் திணை

இன்றைய தகவல் தொழில்நுட்பத்தில் ‘ஆன்டாலஜி’ என்பது ஒரு துறையில் உள்ள பொருள்களையும் அவற்றின் உறவுகளையும் முறையாக வரையறுக்கும் அமைப்பு. தரவுத்தளத்தில் ஒரு பதிவுக்கு மீத்தரவு சேர்ப்பதும் இதனோடு தொடர்புடையது. மருதத் திணையில் ஒரு பாடலுக்கு நிலம், பொழுது, கருப்பொருள், உரிப்பொருள் எனும் குறிச்சொற்களை இடுவதும் ஒரு வகை மீத்தரவு ஒதுக்கீடாகவே தோன்றுகிறது. ஒரு பாடலில் ‘நாரை’, ‘தாமரை’, ‘ஊடல்’ ஆகிய சொற்கள் வந்தால் அது மருதம் என்று அடையாளம் காண்பது தொகுப்பாளர்களின் மரபிலேயே இருந்தது. அறிஞர்கள் சங்கப் பாடல்களுக்கான திணைசார் எண்மிய அகரமுதலிகளையும் கருத்தியல் வகைபாடுகளையும் உருவாக்க முயன்றுள்ளனர்; அவ்வாறான முயற்சிகளுக்கு இத்திணைக் கட்டமைப்பு இயல்பான வழிகாட்டியாகும்.

### சங்க இலக்கியத்தில் மருதம்

எட்டுத்தொகையில் ஐங்குறுநூறு திணைவாரியாகப் பிரிக்கப்பட்ட நூல்; அதன் முதல் நூறு பாடல்கள் மருதத் திணைக்கு உரியவை அவற்றைப் பாடியவர் ஓரம்போகியார் என்று மரபு கூறுகிறது. அகநானூற்றில் மருதத் திணைப் பாடல்கள்

ஆறில் முடியும் எண்களில் அமைந்துள்ளன (6, 16, 26 என்ற வரிசை). குறுந்தொகை, நற்றிணை ஆகிய தொகுப்புகளிலும் மருதப் பாடல்கள் கலந்துள்ளன. இவ்வாறு எண்ணடிப்படையில் திணைகளை ஒதுக்கும் தொகுப்பு முறை, ஒரு பெரிய தரவுத்தொகுப்பைச் சீரான குறியீட்டு முறையில் ஒழுங்குபடுத்தும் செயல்முறையாகும். தொகுப்பாசிரியர்கள் அகநானூற்றை பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற வரிசையில் சுழற்சி முறையில் எண்களிட்டு ஒழுங்கமைத்தனர். இது பதிவுகளை வரிசையிலிருந்தே வகை அறிய உதவும் ஓர் அட்டவணைக் குறியீடு போன்றது.

பத்துப்பாட்டில் பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தின் வளம், வணிகம், ஆற்றின் செழிப்பு ஆகியவற்றைக் காட்டுகிறது. அது வேளாண் நிலத்தையும் துறைமுக நகரையும் இணைத்துப் பேசுவதால், மருத நிலத்தின் உற்பத்தியும் நகரத்தின் வணிகமும் ஒரே பொருளாதாரச் சங்கிலியின் பகுதிகள் என்பதை நமக்குப் புலப்படுத்துகிறது. அதில் பொருள்கள் கடல்வழியும் தரைவழியும் வந்து சேர்ந்த காட்சிகளை,

> “நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்
> காலின் வந்த கருங் றி மூடையும்
> வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
> குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,
> தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்,
> கங்கை வாரியும், காவரிப் பயனும்,
> ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,
> அரியவும், பெரியவும், நெரிய ஈண்டி,
>
> (பட்டினப்பாலை:185-192)

என்று பதிவு செய்யப்பட்டுள்ளன. இத்தகைய வணிகத்துக்குப் பொருளின் வருகை, அளவு, உரிமை ஆகியவற்றைப் பதிவுசெய்யும் ஏதோ ஒரு முறை இருந்திருக்க வேண்டும் என்பது இயல்பான ஊகம்; ஆயினும் அம்முறையின் விவரங்களை இலக்கியம் தருவதில்லை என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

## வாயில்கள்: தகவல் தொடர்புக் கண்ணோட்டம்

### வாயில்கள் யார்?

மருதத் திணைப் பாடல்களில் பெரும்பாலும் தலைவன் பரத்தையரிடம் செல்வதாலும் தலைவி ஊடுவதாலும் பிணக்கு எழுகிறது. அப்போது தலைவனும் தலைவியும் நேரடியாகப் பேசுவதில்லை பாணன், தோழி, விறலி, கூத்தர், பாங்கன் போன்றோர் இடையில் நின்று செய்தி கொண்டு செல்கின்றனர். தொல்காப்பியம் இத்தகையோரை ‘வாயில்கள்’ என்ற பெயரில்

> “தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்,
> பாணன், பாட்டி, இளையர், விருந்தினர்
> கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்
> யாத்த சிறப்பின் வாயில்கள்”

என்ப (தொல்.கற்பு.1137)

என்று தொகுத்துக் குறிப்பிடுகிறது. வாயில் என்ற சொல்லே ‘நுழைவாயில்’ என்ற பொருள் தருவது இங்கு சுவையான ஒற்றுமை.

## இடைநிலைத் தூதுவர்: ஒப்புமை

தகவல் தொடர்பு மாதிரியில் அனுப்புநர், பெறுநர், செய்தி, ஊடகம், இடைநிலைக் கருவி என்ற கூறுகள் உள்ளன. வாயில்கள் ஒரு வகையில் இடைநிலைக் கருவியாகவும் வழிகாட்டியாகவும் செயல்படுகின்றனர். தலைவன் சொல்ல விரும்பியதை அப்படியே சொல்லாமல், தலைவியின் மனநிலைக்கேற்ப மாற்றி எடுத்துச் செல்வதையும், தலைவி வாயிலின் மூலம் மறுமொழி அனுப்புவதையும் பாடல்கள் சித்திரிக்கின்றன. இது வலையமைப்பில் செய்தி ஒரு சேவையகம் வழியாக அனுப்பப்படுவதையும், அது சில சமயம் செய்தியை மாற்றி அல்லது தாமதப்படுத்தி வழங்குவதையும் நினைவூட்டுகிறது. இது இலக்கிய உத்தியே தவிர உண்மையான தகவல் பரிமாற்ற நெறிமுறை அன்று. ஆனால் ‘இடைத்தரகர் வழியாகச் செய்தி கடத்தப்படும்போது அதன் பொருள் எவ்வாறு மாறக்கூடும்’ என்ற கவனிப்பு தகவல் ஆய்வுக்குப் பயன்படும் நுண்ணறிவாகும்.

மேலும், பாணர்களும் கூத்தர்களும் ஊர் ஊராகச் சென்று செய்திகளையும் பாடல்களையும் கொண்டு சென்றனர். புலவர்கள் அரசர்களிடமிருந்து அரசர்களுக்குச் செல்லும்போது அவர்களுடைய புகழையும் நாட்டு நிலையையும் எடுத்துச் சென்ற நிலை, சங்க காலச் செய்திப் பரவலின் ஓர் இயற்கை அமைப்பைக் காட்டுகிறது. இவர்கள் சமூகத்தின் நடமாடும் ஊடகங்களாகச் செயல்பட்டனர் என்று கூறுவது ஒப்புமை அளவில் பொருந்தும்.

## வேளாண் அறிவும் நீர்த்தரவும்

### பருவ அறிவு

மருதத்தின் பெரும்பொழுது ஆறு பருவங்களையும் சிறுபொழுது வைகறையையும் குறிக்கிறது. உழவர் பருவ மாற்றங்களை, மழைக்குறிகளை, ஆற்றுப் பெருக்கை முன்னறிந்து விதைப்பு, நடவு, அறுவடை ஆகியவற்றைத் திட்டமிட்டனர் என்பதை,

> “நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்
> உண்டி கொடுத்தோ ருயிர்கொடுத் தோரே
> உண்டி முதற்றே யுணவின் பிண்டம்
> உண்வெனப் படுவது நிலத்தொடு நீரே”

(புறம்.18:18-21)

என்னும் பாடல் இன்றையத் தலைமுறைக்கு எடுத்துக்கூறுகிறது. இது தலைமுறை தலைமுறையாகக் கடத்தப்பட்ட நேரத் தொடர்த் தரவு போன்ற அறிவு; எழுத்துப் பதிவின்றி நினைவிலும் வழக்கிலும் இருந்தது. இன்றைய வானிலை முன்னறிவிப்பு, பருவகாலப் பகுப்பாய்வு போன்ற தொழில்நுட்பங்கள் இதே அடிப்படைத் தேவையைப் புதிய கருவிகளால் நிறைவேற்றுகின்றன.

### நீர் மேலாண்மை பற்றிய சிந்தனை

நிலமும் நீரும் இணைந்ததே உலகைத் தாங்குவதென்றும் நிலத்தின் தாழ்வான இடங்களில் நீரைத் தேக்குவோர் நாட்டைக் காப்பவர் என்பதை,

> “நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
> தட்டோர் அம்ம, இவண் தட்டோரே
> தள்ளாதோர் இவண் தள்ளாதோரே”

(புறம்.18:23-25)

என்று வலியுறுத்துகிறது. திருக்குறளின் வான்சிறப்பு, உழவு அதிகாரங்கள் மழையையும் உழவையும் உலக இயக்கத்தின் அடிப்படையாகக் கொள்கின்றன. பரிபாடலின் வையைப் பாடல்கள் ஆற்றுவெள்ளத்தைச் சமூகம் எப்படிக் கவனித்தது என்பதைக் காட்டுகின்றன. இவற்றிலிருந்து நீரைப் பற்றிய அறிவு – எங்கே, எவ்வளவு, எப்போது – சமூகத்தின் மைய அறிவாக இருந்தது என்பது புரிகிறது.

தென்தமிழக ஏரி மேலாண்மை பற்றிய களஆய்வுகள் (எ.கா. டேவிட் மோஸ்) நீரைப் பகிரும் உரிமைகள், மடைப் பணிகள், கூட்டுப் பராமரிப்பு போன்றவை ஊர்ச்சமூக அமைப்புகளால் நடத்தப்பட்டதைக் காட்டுகின்றன. இது தகவல் மேலாண்மையாகவும் பார்க்கப்படலாம்: யாருக்கு எப்போது நீர் உரிமை, எவர் எதைச் செய்ய வேண்டும் என்ற தகவல்கள் சமூக நினைவில் பாதுகாக்கப்பட்டன. இத்தகைய தகவல்கள் இன்று எண்மிய நில ஆவணங்களாகவும் நீர்நிலைப் பதிவேடுகளாகவும் மாறுகின்றன.

## அறிவுப் பதிவு: வாய்மொழியிலிருந்து எண்மியம் வரை

சங்கப் பாடல்கள் தொடக்கத்தில் வாய்மொழியாகவும் பின்னர் ஓலைச்சுவடிகளிலும் பேணப்பட்டன. நீண்ட காலம் மறக்கப்பட்டிருந்த இத்தொகுப்புகளை உ.வே. சாமிநாதையர் போன்றோர் சுவடிகளிலிருந்து தேடி எடுத்து அச்சில் வெளியிட்டனர். ஓலைச் சுவடிகளின் எளிதில் அழியும் தன்மை, பிரதியெடுப்பின்போது ஏற்படும் பிழைகள், வெவ்வேறு படிவங்களுக்கிடையிலான பாட வேறுபாடுகள் ஆகியவை பதிப்பாசிரியர்களுக்குப் பெரும் சவாலாக இருந்தன. இவை தரவுப் பாதுகாப்பு, பதிப்பு ஒத்திசைவு போன்ற இன்றைய கருத்துகளின் முன்னோடிப் பிரச்சினைகளாகவே தெரிகின்றன.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து தமிழ் இலக்கியம் எண்மியமாக்கப்பட்டு வருகிறது. மதுரைத் திட்டம் போன்ற தன்னார்வ முயற்சிகளும், தமிழ் இணையப் பல்கலைக்கழகம் போன்ற நிறுவன முயற்சிகளும் சங்க நூல்களைப் பொதுவில் தேடக்கூடிய உரைவடிவில் வழங்கியுள்ளன. யூனிகோடு தமிழ்க் குறியீடு இவ்வெண்மியமாக்கலுக்கு அடிப்படைத் தரநிலையாக அமைந்தது. இதனால் ஒரு சொல் சங்க இலக்கியம் முழுவதிலும் எங்கெங்கு வருகிறது என்பதை நொடிகளில் தேட முடிகிறது. இத்தகைய சொல்லடைவு நூற்றாண்டுகளுக்கு முன் கைவேலையாக மட்டுமே சாத்தியமாக இருந்தது. எனவே தொழில்நுட்பம் இலக்கிய ஆய்வின் வேகத்தையும் வீச்சையும் அதிகரித்துள்ளது.

எண்மியமாக்கத்தில் சில எச்சரிக்கைகளும் உண்டு. இணையத்தில் கிடைக்கும் பாடங்கள் எப்போதும் பதிப்பாய்வு செய்யப்பட்டவையாக இருப்பதில்லை; எழுத்துப் பிழைகள், பாடபேதம் குறிக்கப்படாமை போன்றவை ஆய்வுக்குத் தடையாகலாம். அதனால் ஆய்வாளர் எண்மியப் பாடத்தை அச்சுப் பதிப்போடு ஒப்பிட்டுச் சரிபார்க்க வேண்டும். பதிப்புரிமை, மூல ஆதாரப் பதிவு ஆகியவற்றையும் குறிப்பிடுவது ஆய்வுநெறி.

## திணைக் கட்டமைப்பும் கணினி அறிவுப் பிரதிநிதித்துவமும்

மருதத் திணையின் முப்பொருள் வகைப்பாட்டை ஒரு தரவுத்தள வடிவமாக எழுதிப் பார்க்கலாம். ‘திணை’ ஒரு முதன்மை அட்டவணையாகவும், ‘நிலம்’, ‘பொழுது’, ‘கருப்பொருள்’, ‘உரிப்பொருள்’ ஆகியவை அதன் புலங்களாகவும் அமையும். பாடல் ஒவ்வொன்றும் அட்டவணையில் ஒரு பதிவாகி, அதன் புலவர், தொகுப்பு, எண், கருப்பொருள் சொற்கள் ஆகியவை மீத்தரவாக ஒதுக்கப்படலாம். இவ்வாறு

அமைத்தால், ‘மருதத் திணையில் நாரை வரும் பாடல்கள் எவை’ என்று கேட்கும் வினாவுக்குக் கணினி உடனே விடையளிக்கும். இது பழைய இலக்கண வகைப்பாடு புதிய தேடல் அமைப்பாகும் ஒரு நல்ல எடுத்துக்காட்டு.

இதைப் பொருளாய்வுக்கும் நீட்டிக்கலாம். ஒரு பாடலில் உள்ள சொற்களை எண்ணி, அவை மருதக் கருப்பொருள் தொகுதிக்கு எந்த அளவு ஒத்துப்போகின்றன என்று மதிப்பிடுவதன் மூலம், திணை தெளிவாகக் குறிக்கப்படாத பாடல்களையும் வகைப்படுத்த முயலலாம். ஆனால் சங்கப் புலவர்கள் கருப்பொருளைப் பிற திணையிலும் கலந்து பயன்படுத்துவதுண்டு (கலப்புத் திணை, திணை மயக்கம்) எனவே தானியங்கி வகைப்பாடு தவறான முடிவைத் தரக்கூடும். இத்தகைய ஆய்வுகளில் இலக்கிய அறிஞரின் மேற்பார்வை இன்றியமையாதது.

## தற்கால மருத நில வேளாண்மையும் தகவல் தொழில்நுட்பமும்

### தொழில்நுட்பப் பயன்பாடுகள்

இன்று காவிரிப் படுகை, வைகைப் படுகை போன்ற மருத நிலங்களில் தகவல் தொழில்நுட்பம் பல வகையில் பயன்படுகிறது. செயற்கைக்கோள் படங்கள் மூலம் பயிர்ப் பரப்பையும் நீர்நிலைகளின் நிரம்பலையும் கணிக்கும் தொலையுணர்வு, நில எல்லைகளையும் நீர்வழிகளையும் வரைபடமாக்கும் புவித் தகவல் அமைப்பு, மண் ஈரப்பதம், நீர்மட்டம் ஆகியவற்றை அளக்கும் உணர்கருவிகள், மழை, வெப்பநிலை முன்னறிவிப்புச் செயலிகள், சந்தை விலை அறிவிப்புச் சேவைகள் ஆகியவை முக்கியமானவை. தமிழக அரசு வேளாண் துறையின் ‘உழவன்’ போன்ற கைப்பேசிச் செயலிகள் இத்தகவல்களை உழவர்களுக்கு எளிய வடிவில் வழங்கும் முயற்சிகளாகக் குறிப்பிடப்படுகின்றன அவற்றின் தற்போதைய அம்சங்களையும் பரவலையும் அரசு வெளியீடுகளில் சரிபார்க்க வேண்டும்.

இவை சங்ககாலத் தேவைகளின் புதிய வடிவங்களே: பருவ அறிவு வானிலைச் செயலியாகிறது; நீர்ப்பகிர்வு அறிவு நீர்நிலைப் பதிவேடாகிறது பாணர்கள் கொண்டுசென்ற செய்தி கைப்பேசிச் செய்தியாகிறது. இவ்வொப்புமை உழவர் அறிவையும் தொழில்நுட்பத்தையும் எதிரெதிராக வைக்காமல், தொடர்ச்சியாகப் பார்க்க நமக்குக் கற்றுத்தருகிறது.

### முடிவுரை

மருதத் திணை சங்க இலக்கியத்தில் ஒரு நிலத்தை மட்டுமன்றி, ஒரு சமூக அறிவு அமைப்பையும் நமக்குக் காட்டுகிறது. முப்பொருள் வகைப்பாடு அறிவை அடுக்குமுறையில் ஒழுங்குபடுத்துகிறது; வாயில்கள் வழியான செய்திப் பரிமாற்றம் இடைநிலைத் தகவல் தொடர்பின் இயல்பைச் சுட்டுகிறது; பருவம், நீர் பற்றிய அறிவு வேளாண் தரவின் தேவையை உணர்த்துகிறது; வாய்மொழியிலிருந்து எண்மியம் வரையிலான பயணம் அறிவுப் பதிவின் சவால்களைப் புலப்படுத்துகிறது.

இவ்வாறு, தகவல் தொழில்நுட்பம் என்பது மேலிருந்து வந்த புதுமை மட்டுமன்று; மனிதர் தம் அறிவை ஒழுங்குபடுத்தவும் பகிரவும் செய்த தொடர்ச்சியான முயற்சிகளின் இன்றைய வடிவம் என்ற பார்வையை சங்கச் செவ்வியல் மரபு நமக்குத் தருகிறது. அந்த மரபை மதிப்போடு ஆராய்ந்து, எண்மிய உலகில் உழவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பயன்படும் வகையில் இணைப்பதே எதிர்காலப் பணி.

## துணைநூற்பட்டியல்


1. மாணிக்கவாசகன்.ஞா, தொல்காப்பியம் மூலமும் விளக்க உரையும், உமா பதிப்பகம், மண்ணடிஈ சென்னனை- 01, பதிப்பு-2010.
2. துரைசாமிப்பிள்ளை, ஔவை சு., புறநானூறு, கழக வெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, பதிப்பு-2008.
3. சோமசுந்தரனார்.பொ.வே, பட்டினப்பாலை, பத்துப்பாட்டு பகுதி-2, கழக வெளியீடு, சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், திருநெல்வேலி, பதிப்பு-2008.
4. மதுரைத் திட்டம், எண்மிய நூலகத் தளங்கள், ஆண்டு-1998.
5. தமிழ்நாடு அரசு வேளாண்மை–உழவர் நலத் துறை – ‘உழவன்’ செயலி தொடர்பான அதிகாரப்பூர்வ வெளியீடுகள்.